# ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள்

**நிர்வாக உத்தியோகத்தர்கள் - நிரந்தர அடிப்படை**

**இரத்மலானை வளாகம் மற்றும் தெற்கு பல்கலைக்கழகம் - சூரியவெவ**

- **உதவிப் பதிவாளர் பதவி**

**தெற்கு பல்கலைக்கழகம் - சூரியவெவ**

- **உதவிப் நிதியாளர் பதவி**

**எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் - ஒப்பந்த அடிப்படை**

**இரத்மலானை வளாகம்**

- **முகாமைத்துவ உதவியாளர் பதவி - தரம் III (ஒரு வருட ஒப்பந்த அடிப்படை)**

## தகைமைகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை

**நிர்வாக உத்தியோகத்தர்கள் - நிரந்தர அடிப்படை**

- **உதவிப் பதிவாளர் பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(a) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

(b) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டத்துடன் நிர்வாகம்/ முகாமைத்துவம் ** முதலிய துறைகளிலிருந்து பிற்படிப்பு பட்டம் / பிற்படிப்பு டிப்புளோமாவைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை** : இருபத்திரெண்டு (22) வயதிற்குக் குறையாததாகவும் முப்பது (30) வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

(a) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டத்துடன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு தற்போது சேவையிலிருக்கும் ஒரு ஊழியராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(b) கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் U-MN-1(II) / U-MT1(II) எனும் பதவியில் அல்லது அதற்கு மேற்பட்ட பதவியில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு தற்போது கடமையாற்றும் ஒரு ஊழியராக இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை** : ஐம்பத்து மூன்று (53) வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

- பொது/ வியாபார நிர்வாகம்
- முகாமைத்துவம்
- பொது கொள்கைகள்
- மனித வள முகாமைத்துவம்
- பொருளியல்
- சட்டம்
- நிதி முகாமைத்துவம்
- திட்ட திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம்
- தகவல் தொழிநுட்பம் அல்லது
- முகாமைத்துவம் / நிர்வாகம் சம்பந்தமான ஏதாவது ஒரு துறை

- **உதவிப் நிதியாளர் பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இறுதியாண்டு பரீட்சையில் சித்தி அல்லது அதற்கு சமமான ஏதேனும் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. (a) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து கணக்கியலில் விசேட பட்டத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து பட்டத்தைக் கொண்டிருத்தலுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் அல்லது அதற்குச் சமனான நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(iii) இலங்கை உயர் தொழிநுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) அல்லது அதனது முன்நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட கணக்கியலில் உயர் தேசிய டிப்புளோமாப் (HNDA) பட்டத்தைக் கொண்டிருத்தல்.

அத்துடன்

(b) அரசாங்க/ அரச திணைக்களம் அல்லது பிரபல்ய தனியார் துறை திணைக்களத்தில் கணக்கியல் / கணக்காய்வில் இரண்டு (02) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை** : இருபத்திரெண்டு (22) வயதிற்குக் குறையாததாகவும் முப்பது (30) வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1. (a) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட பட்டத்துடன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு தற்போது சேவையிலிருக்கும் ஒரு ஊழியராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(b) கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் U-MN-1(II) / U-MT1(II) எனும் பதவியில் அல்லது அதற்கு மேற்பட்ட பதவியில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு தற்போது கடமையாற்றும் ஒரு ஊழியராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

2. நிதி/ கணக்காய்வு துறை/பிரிவில் ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை** : ஐம்பத்து மூன்று (53) வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

## தகைமைகளுக்கான கட்டுப்பாடுகள்

a. ஆட்சேர்ப்பு நடைமுறையின் அடிப்படையில் நடத்தப்படும் எழுத்துப்பரிட்சையில் வெளிவாரி / உள்வாரி விண்ணப்பதாரர்கள் இரண்டு முறைகளுக்கு மேல் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

b. எந்த ஒரு உள்வாரி விண்ணப்பதாரரும் வெளிவாரி /உள்வாரி என்ற இரு பிரிவுகளின் கீழும் தகுதி பெற்றிருந்தால் அவர் / அவள் வெளிவாரி 02 முறை மற்றும் உள்வாரி 02 முறை என மொத்தமாக 04 முறைகள் எழுத்துப்பரிட்சையில் தேற்ற அனுமதிக்கபட வேண்டும்.

c. ஏந்தவொரு மத ஒழுங்கிலும் நியமிக்கபட்ட எந்தவொரு நபரும் ஆட்சேர்ப்புக்கான எழுத்துப்பரிட்சையில் பங்கேற்க அனுமதிக்கபட மாட்டார்கள்.

## ஆட்சேர்ப்பு நடைமுறை

ஒவ்வொரு பிரிவின் கீழும் அனைத்து விண்ணப்பதாரர்களும் அந்தந்த பிரிவிற்குப் பொருந்தக்கூடிய தொடர்புடைய பாட பகுதிகளை உள்ளடக்கிய எழுத்து பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

- **உதவிப் பதிவாளர் பதவி**

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

1) நுண்ணறிவு மற்றும் பகுத்தறியும் திறன்
2) மேலாண்மை திறன்கள்
3) ஆங்கில மொழி (இரு பிரிவினருக்கும் பொதுவானது)

உள்வாரி விண்ணப்பதாரர்கள்

1) பல்கலைக்கழக அமைப்பு தொடர்பான சட்டம்
2) பொது நிர்வாகம் மற்றும் நிதி நடைமுறைகள்
3) ஆங்கில மொழி (இரு பிரிவினருக்கும் பொதுவானது)

* பரீட்சை தாள்கள் ஆங்கில மொழியில் காணப்படும்.

- **உதவிப் நிதியாளர் பதவி**

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

1) நுண்ணறிவு மற்றும் பகுத்தறியும் திறன்
2) கணக்கியல் மற்றும் நிதி
3) ஆங்கில மொழி (இரு பிரிவினருக்கும் பொதுவானது)

உள்வாரி விண்ணப்பதாரர்கள்

1) பல்கலைக்கழக அமைப்பு தொடர்பான சட்டம்
2) கணக்கியல் மற்றும் நிதி நிர்வாக நடைமுறைகள்
3) ஆங்கில மொழி (இரு பிரிவினருக்கும் பொதுவானது)

* பரீட்சை தாள்கள் ஆங்கில மொழியில் காணப்படும்.

## எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் - ஒப்பந்த அடிப்படை

- **முகாமைத்துவ உதவியாளர் பதவி - தரம் III (ஒரு வருட ஒப்பந்த அடிப்படை)**

1. க.பொ.த (சா/தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அவற்றுள் பின்வரும் பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்:-

   (i) சிங்கள மொழி / தமிழ் மொழி
   (ii) ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   (iii) கணிதம்

அத்துடன்

2. க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்து பாடங்களிலும் (பொது பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத்திட்டத்தின்படி ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் இதற்குப் போதுமானது).

3. பின்வரும் தகைமைகள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்:-
   a) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து கணணிப் பிரயோகத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆறு (06) மாதத்திற்கும் குறையாத தகைமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

   அத்துடன்

   b) கணணி பிரயோக பயன்பாட்டு தொகுப்புகளை பயன்படுத்தலில் இரண்டு வருட அனுபவம்.

**குறிப்பு :- தகைமைகள்**

(a) இலங்கைப் பிஜையாக இருத்தல் வேண்டும்.
(b) விண்ணப்ப முடிவுத் திகதியன்று பதினெட்டு (18) வயதிற்குக் குறையாததாகவும் முப்பது (30) வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(c) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை:-**

பின்வரும் பாடங்களிள் எழுத்துப்பரீட்சை இடம்பெறும்:

- சிங்கள / தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு மற்றும் பொதுஅறிவு திறன்
- கணணி அறிவு

* பரீட்சை தாள்கள் ஆங்கில மொழியில் காணப்படும்.

**சம்பள அளவுத் திட்டம்**

1. உதவிப் பதிவாளர் மற்றும் உதவிப் நிதியாளர் பதவி:-

U-EX I (II) ரூ.50,625 – 3x1,125 – 54,000 (EB) 55,335; 12x1,335 - 71,355 p.m + (45% MCA + அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

2. முகாமைத்துவ உதவியாளர் பதவி - தரம் III (ஒரு வருட ஒப்பந்த அடிப்படை)

ரூ. 30,725 p.m. + (ரூ. 7,800 வாழ்க்கைச் செலவு + ரூ.5,000 மாதாந்த கொடுப்பனவு)

**நியமன முறை**

பொது உளச்சார்பு பரீட்சை மற்றும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை என்பன மூலம் தெரிவுகள் இடம்பெறும்.

**ஏனைய நன்மைகள்**

**நிரந்தர அடிப்படை:-**

EPF, ETF, பணிக்கொடை தொகை, இலவச சுகாதாரக் காப்புறுதி, வருடாந்த ஊக்குவிப்பு தொகை, ஊழியர்களது குழந்தைகளுக்கான புலமைப்பரில்கள், பல்கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சையில் முன்னுரிமை மற்றும் ஏனைய சலுகைகள்.

**ஒப்பந்த அடிப்படை:-**

EPF, ETF கொடுப்பனவுகள், வருடாந்த ஊக்குவிப்பு தொகை, பல்கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சையில் முன்னுரிமை மற்றும் நலன்புரி போக்குவரத்து.

**பொது நிபந்தனைகள் - அனைத்து ஊழியர்கள்**

01. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
02. ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ ஆணைக்குழுவினால் ஒவ்வொரு பதவி / தரத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட காலியிடங்களுக்குள் மட்டுமே விண்ணபத்தாரிகளை தெரிவு செய்தல் தேர்வுகள் இடம்பெறும்.
03. விண்ணப்பதாரிகளால் இணையத்தளத்தில் (www.kdu.ac.lk) இருந்து தரவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டு தொடர்புடைய சான்றிதழ்களின் நகல் பிரதியுடன் 2022.10.25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரடியாக கையளித்தல் வேண்டும்.
04. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை குறிப்பிட வேண்டும்.
05. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
06. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / கட்டுப்பாட்டு வாரியங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் பிரதானி மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
07. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொண்ட விண்ணப்பப்படிவத்தின் மூலமாக மாத்திரம் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பிந்திக்கிடைக்கும், பூரணப்படுத்தப்படாத அல்லது மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனை இல 06 இற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

08. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.

09. தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முக / செயன்முறை பரீட்சை மற்றும் தகுதித் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

10. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு பதவிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளின்படி மற்றும் செயன்முறை பரீட்சை / தகுதித் தேர்வு மற்றும் நேர்முக பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தேர்வுகள் நடைபெறும்.

11. தகுதித் தேர்வு / நேர்முக பரீட்சைக்கு மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் உரிமையை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

12. நிரந்தர ஊழியர் வெற்றிடங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சமீபத்திய சம்பளச் சுற்றறிக்கையின் படி சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

13. ஒப்பந்த அடிப்படைக்காக 2018.12.03 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவை திணைக்கள கடித இலக்கம் DMS/1823/Vol-III இன் படி சம்பளம் வழங்கப்படும்.

**<u>பொது நிபந்தனைகள் - நிர்வாக ஊழியர்கள்</u>**

01. பதவிக்கான தகைமைகளுக்காக ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளம், 2017.06.28 ஆம் திகதி பல்கலைக்கழக ஆணைக்குழு சுற்றுநிருபம் இல.15∴2017 மற்றும் அதுதொடர்பான திருத்தங்களை பார்க்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**<u>பொது நிபந்தனைகள் - எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள்</u>**

01. பதவிக்கான தகைமைகளுக்காக ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளம், 2018.07.16 ஆம் திகதி பல்கலைக்கழக ஆணைக்குழு சுற்றுநிருபம் இல.06∴2018 மற்றும் அதுதொடர்பான திருத்தங்களை பார்க்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மேலதிக விபரங்களுக்கு:**
செல்வி. கஸ்மி சந்தநாயக
சிரேஸ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள் கிளை)
தொலைபேசி : +94 (0) 11 263 2028 (Ext: 377) | 0710219289
“Staff Recruitment- KDU" <staffrecruit@kdu.ac.lk>